திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு தலைவர் அவர்களே, மெரிட் உதவித்தொகையை பொறுத்தவரையில் படிக்கிற மாணவனுடைய தகுதியை வைத்துத்தான் கொடுக்கிறோம். அந்த நிலையில் பெற்றோர்கள் வருமானத்தைப் பார்ப்பது சரிதானா? ஆகவே மறுபரிசீலனை செய்து படிக்கக்கூடிய மாணவர்களுக்கு உற்சாகம் தருகிற வகையிலே மெரிட் அடிப்படையிலே உதவித் தொகை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது தனியாக பரிசீலிக்கப்பட வேண்டும். ஆனால் இப்போது அந்த 6,000 ரூபாய் என்பது என்ன என்பதைப் பற்றி ஒரு விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன். பெற்றோர் களுடைய அடிப்படை ஊதியம், சிறப்பு ஊதியம் மற்றும் போனஸ் ஆகியவற்றின் கூட்டுத் தொகையில் 20 விழுக்காடு நிலையான கழிவு அனுமதிக்கப்படும். அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற படிகள் வருமானத்தைக் கணக்கிட சேர்க்கப்படுவதில்லை. இரண்டாவ தாக, மீதமுள்ள தொகையில் பெற்றோர்களது ஊதியத்திலிருந்து மாதந்தோறும் பிடித்தம் செய்யப்படும் பொது வைப்பு நிதிக்கான சந்தாத் தொகை, ஆயுள் காப்பீட்டிற்கான சந்தாத் தொகை, பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு செலுத்தும் சிறு சேமிப்புத் திட்ட சந்தா ஆகியவற்றின் ஓராண்டு கூட்டுத்தொகை அல்லது மேலே 20 விழுக்காடு கழிக்கப் பட்ட பின் எஞ்சிய தொகையில் 30 விழுக்காடு இவற்றிலே எது குறைவோ அது கழிக்கப்படும். இதற்குப் பின்னாலே உள்ள தொகையை ஆண்டு வருமானமாக கணக்கில் கொண்டு அதன் அடிப்படையிலே மாணவர்களுக்கு உதவித் தொகை அவர்கள் பயிற்சி காலம் முடிய வழங்கப்படும். ஆகவே 6,000 ரூபாய் என்று சொல்கிறோமே தவிர உண்மையிலே பார்க்கிறபோது கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும்.

குறிஞ்சிப்பாடியில் பிணங்களைப் 'போஸ்ட் மார்ட்டம்' செய்ய புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

65 (*வினா எண் 18371)—திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடியில் பிணங்களைப் 'போஸ்ட் மார்ட்டம்' செய்ய கட்டிட வசதியில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் அதற்குக் கட்டிடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) புதிய கட்டிடம் கட்ட மேல் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

1984 பிப்ரவரி 18]

(முற்பகல் 9-20)

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்கள். ஆனால் குறிஞ்சிப்பாடி பகுதியில் பஸ், லாரி போன்றவற்றின் காரணமாக விபத்தில் பாதிக்கப் பட்டவர்களை ஒவ்வொரு தரமும் கடலூருக்குத்தான் எடுத்துச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட பிணங்களை எடுத்துச்செல்ல யாரும் முன்வருவது இல்லை. ஆகவே, உடனடியாக புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இன்னும் 3 மாதத்தில் அந்தக் கட்டிடம் அங்கே இருக்கும்.

இராமேஸ்வரம் நகரியத்தை நகரசபையாக்கும் திட்டம்.

66 (*வினா எண் 19982)—திரு. த. இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

இராமேஸ்வரம் நகரியத்தை நகரசபையாக ஆக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே. 'ஆம்' என்றால் எப்போது என்று அறிய விரும்புகிறேன், ராமேஸ்வரம் ஒரு சரித்திர பிரசித்தி பெற்றதும், பில்கிரிம் சென்டரும் ஆக இருப்பதால், விரைவில் அதை அமுல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகரியத்தை நகராட்சியாக மாற்ற வேண்டும், அல்லது ஒரு ஊராட்சியை பேரூராட்சியாக மாற்றவேண்டும், ஒரு பேரூராட்சியை நகராட்சியாக மாற்றவேண்டும் என்பது எல்லாம் நிதிநிலைமைகளைக் கணக்கில் கொண்டு தான் செய்கிறோம். ஆகவே, ஆண்டு வருமானம் சுமார் 5 இலட்சம் இருந்தால் தான் நகராட்சியாக மாற்ற முடியும். ஆகவே, அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, அது ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரம், கோயில் ஸ்தலம், புண்ணிய ஸ்தலம் என்றெல்லாம் சொன்னார்கள். அவற்றையும் கருத்தில்கொண்டு தான் அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நகரியத்தை நகராட்சியாக மாற்றவேண்டும் என்று சர்வ கட்சியைச் சேர்ந்த — அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், இந்திரா காங்கிரஸ் உள்பட—